சார்பு நீதிமன்றம், பெருந்துறை
**OS 05/2009**

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ம் நாள் Dw3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 28.08.2025

Dw3 ( சுப்பிரமணியம்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)**

தாவா 1 ம் இன சொத்தை கிரயம் பெற்றுள்ளேனா என்றால் கிரயம் பெற்றுள்ளேன், ஆனால் எந்த சொத்தை கிரயம் பெற்றேன் என்று என்னால் சொல்ல முடியாது. 13.06.2001 ல் நான் கிரயம் பெற்றேன். கிரயம் பெறும் முன்பு ஒப்பந்தம் செய்தேனா என்றால் உரிமையாளரிடம் ஒப்பந்தம் செய்யவில்லை, பொது அதிகார முகவரிடம் ஒப்பந்தம் செய்தேன். அந்த ஒப்பந்த பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை. எவ்வளவு ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஒப்பந்தத்திற்கு முன்போ கிரயத்திற்கு முன்போ சொத்திற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழில் வாதி சொத்தை கிரயம பெறுவதற்கு அவர் பெயரில் ஏற்படுத்திய கிரய ஒப்பந்தம் வந்ததா என்றால் இல்லை. நான் பார்த்த வில்லங்க சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளுக்கு வில்ல்ங்கம் பார்த்தேன் என்றால் கிரயத்திற்கு முன்பு 10 ஆண்டுகளுக்கு கிரயம போட்டேன். 06.07.1998 ல் வாதியும் 1 ம் பிரதிவாதியும் தாவா சொத்தை பொறுத்து ஒரு பதிவு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 04.01.1999 ல் ஒரு கால நீட்டிப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தி அதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால அது பற்றி எனக்கு தெரியாது. சொத்து சம்பந்தமாக அருகில் உள்ளவர்களிடம் சொத்தில் வில்லங்கம் எதுவும் உள்ளதா என்பதை விசாரித்தேனா என்றால் பொது அதிகார முகவர் ரவிசந்திரனை தான் விசாரித்தேன், வேறு யாரையும் விசாரிக்கவில்லை. நான் வில்லங்க சான்றை பார்த்தபோது வாதிக்கும் 1 ம்

பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரய ஒப்பந்தம், கால நீட்டிப்பு ஒப்பந்தம் ஆகியவற்றை தெரிந்து கொண்டேன் என்றும் வாதியின் உரிமையை மறுப்பதற்காக நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கொண்ட பொது அதிகார ஆவணம் மற்றும் கிரய ஆவணங்களை மோசடியாக ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. வாதி கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சொத்தை கிரயம் பெறுவதற்காக தொடர்ந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது நான் கிரயம பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதி அவரது சகோதரர் மற்றும் தகப்பனார் ஆகியோர்களுக்கிடையே பொதுவில் இருந்தது என்றால் சரிதான். சாடசி முன்வந்து தான் கிரயம் பெற்ற சொத்து நீங்கலாக 2 ஏக்கர் நிலம் இருப்பதாக கூறுகிறார். நான் கிரயம் பெற்ற சொத்து உட்பட சொத்தின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 1.80 தான் என்றால் சரியல்ல. அந்த சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு 1/7 பங்கு பாத்தியம் என்றால் சரிதான். வாதி 1/7 சொத்தை கிரயம் பெற வேண்டி தான் ஒப்பந்தம் செய்திருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. நான் சொத்தை கிரயம் பெற்ற போது காலி நிலமாக இருந்தது. நான் ஒருகோடி மதிப்பு பெறும் என்று சொல்வது தவறு என்றும், அவ எண் 6/2009 வழக்கில் நான் தாக்கல செய்த எதிர்வழக்குரையில் அந்த சொத்தின் மதிப்பு ரூ .30 லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து ஒரு கோடி மதிப்பு பெறும் என்று நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி கிரய ஒப்பந்தம் செய்தபோது மேற்படி சொத்தின் மதிப்பு ரூ .70,000/- தான் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சகோதரிகள் பெயர் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் சகோதரிகள் தங்களுக்கு பங்கு உள்ளது என வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். தாவா நிலுவையில் இருந்தபோது தான் நான் கிரயம் பெற்ற சொத்தில் கட்டிடம் எழுப்பினேன் என்றால் சரிதான். நான் வழக்கு நிலுவையில் இருந்தபோது பெற்ற கிரயம் மற்றும் அதில் எழுப்பியுள்ள கட்டிடங்கள் எதுவும் வாதி தாவாவில் கோரியுள்ள பரிகாரங்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் வாங்கிய 40 செண்ட் விஸ்தீரணத்தில் 10 -12 செண்ட் வீஸ்தீரணத்தில் கட்டிடம் உள்ளது, மீதி இடம் காலியாக உள்ளது. சாட்சி முன்வந்து மேற்படி கட்டிடம் உள்ள பகுதி நீங்கலாக 15 x 15 அளவில் ஒரு செட் உள்ளதாக கூறுகிறார். நான் வாங்கிய 40 சென்ட் விஸ்தீரணத்திலும் வாதிக்கு 1/7 பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

ஒப்பந்தப்படி வாதிக்கு தாவா சொத்தில் 1/7 பங்கு கிரயம் பெற்றுக் கொள்ள உரிமையுள்ளது என்றும் அதனால் நான் கிரயம பெற்றது செல்லாது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி தொடர்ந்த அவ 06/2009 வழக்கில் நான் பெற்ற கிரயம் மோசடியானது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாதி 1 ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்தம் உண்மையானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 04.01.1999 ல் வாதிக்கு 1 ம் பிரதிவாதி ஏற்படுத்திய கால நீட்டிப்பு ஆவணமும் உண்மையானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாதி தொடர்ந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது ஒப்பந்தம் செய்து கொண்டதும் வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS